பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 02 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மாநில நீர்வளத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் நீர் பகிர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.
2. தில்லி புதிய முதலமைச்சராக திருமதி ரேகா குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
3. தமிழகத்தில் பாலியல் புகார் மீது காவல்துறை உடனடி நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.
4. மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக மக்களின் சராசரி வருவாய் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.
5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பங்ளாதேஷை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மாநில நீர்வளத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் நீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் நடைபெற்ற மாநில நீர்வள அமைச்சர்கள் மாநாட்டில் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

அனுபவங்களை பகிர்ந்து கொள்வதிலும், பல்வேறு விவகாரங்களுக்கு தீர்வுகளை கண்டறிவதிலும் இத்தகைய மாநாடுகள் முக்கியத்துவம் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

மாநாட்டின் இறுதி நாளான நேற்று நீர் விநியோக சேவைகள், நீர் பாசனம், நீர் பயன்பாடு, கடலோர மேலாண்மை ஆகிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன.

**[]<<<>>>[]**

தில்லி புதிய முதலமைச்சராக திருமதி ரேகா குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அவர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் அவர் துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனாவை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இன்று நண்பகல் தில்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் திருமதி ரேகா குப்தா முதலமைச்சராக பதவியேற்க உள்ளார்.

அவருக்கு துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைக்கிறார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டுள்ள திருமதி ரேகா குப்தாவுக்கு மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு அஸ்வினி வைஷ்ணவ், திருமதி நிர்மலா சீதாராமன், திரு சிவராஜ் சிங் சௌகான், திரு எல் முருகன், முன்னாள் முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் சாலிமார்பாக் தொகுதியிலிருந்து பிஜேபி சார்பில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தில்லி பிஜேபி மகளிர் பிரிவு பொதுச்செயலாளராகவும் திருமதி ரேகா குப்தா பொறுப்பு வகித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டம் ஆழிமதுரை கிராமத்தில் கண்மாயில் மூழ்கி உயிரிழந்த சிறுமிகள் இரண்டு பேரின் பெற்றோர்களுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் அறிந்து தாம் மிகுந்த வருத்தம் அடைந்ததாக தெரிவித்துள்ள முதலமைச்சர், உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பாலியல் புகார் மீது காவல்துறை உடனடி நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இவ்விவகாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

பாலியல் வழக்குகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், அரசியல் காரணங்களுக்காக மாநில அரசை அவர் விமர்சிப்பதாகக் குற்றம்சாட்டியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகம், காவல்துறை அதிகாரி மீதான பாலியல் வழக்கில் மாநில அரசின் செயல்பாட்டை சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் பாராட்டியுள்ளதையும் திரு ரகுபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

[]<<<>>>[]

மாணவர்களின் கல்வியை பாதிக்கும் வகையில் செயல்படுவோர் மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யமொழி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூவ வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், அச்சத்தைப் போக்கும் வகையிலும் சென்னையில் 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையத்தை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் தங்களது பிரச்சினைகளை 1 4 4 1 7 என்ற உதவி எண்ணில் அழைத்து புகார் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாணவர்கள் நம்பிக்கையுடன் மகிழ்ச்சியாக தேர்வை எதிர்கொள்ள வேண்டுமென்று திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

பழங்குடியினரின் மொழியியல் மற்றும் கலாச்சாரத்தை ஆவணப்படுத்துதல் தொடர்பான புத்தாக்க அமர்வு மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் நடைபெற்ற இந்த அமர்வில், அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடி மொழிகள் மற்றும் பேச்சு மொழி மரபுகள்,

பழங்குடியின மொழிகளுக்கு புத்துயிரூட்டுதல்

மொழிகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

தமிழ் பழங்குடியினரின் பேச்சு மற்றும் மொழி பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக மக்களின் சராசரி வருவாய் அதிகரித்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

கரூரில் நடைபெற்ற மத்திய அரசின் பட்ஜெட் விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், கடந்த 2016-ஆம் ஆண்டு ஒருவரின் சராசரி வருவாய் 86 ஆயிரம் ரூபாயாக இருந்தது என்றும், நடப்பு ஆண்டில் இது இரண்டு லட்சத்து 20 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வரை தனிநபர் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதன் மூலம், 87 சதவீதம் மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் திரு அண்ணாமலை கூறினார்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் எஸ் எல் பி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆறாவது புத்தகத் திருவிழா நேற்று தொடங்கியது.

பத்து நாட்கள் நடைபெறும் இந்த புத்தக திருவிழாவில் 120 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - குமார் ) — 43 செகண்ட்*

**[]<<<>>>[]**

வரி ஏய்ப்பு விவகாரத்தில் கூகுல் நிறுவனம் 326 மில்லியன் யூரோ-வை செலுத்த ஒப்புக் கொண்டதை அடுத்து அந்நிறுவனம் மீதான வரி எய்ப்பு வழக்கு கைவிடப்படும் என்று இத்தாலி அரசு வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கி சூடு நடத்தியதில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஏழு பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

ஜி-20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று ஜொகன்னஸ்பெர்க் செல்கிறார்.

**[]<<<>>>[]**

ஆசிய பொருளாதார பேச்சுக்கள் மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் இன்று தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

தில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகளாக திருமதி ரேணு பட்நாக்கர், திரு ரஜ்னீஸ் குமார் குப்தா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி – சிங்கப்பெருமாள் கோவில் ரயில் நிலையங்கள் அருகே கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு நேற்று திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

தருமபுரி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட ஐந்து இடங்களில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் மாநில அமைச்சர் திரு கோ வி செழியன் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**[]<<<>>>[]**

சிவகாசி அருகே ஆனையூர் கிராமத்தில் பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆட்சியர் திருமதி அருணா மாநில அரசின் திட்டப்பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

கோவை மாவட்டம் வால்பாறை நகராட்சி அலுவலகத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆட்சியர் திரு பவன்குமார் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

கொடைக்கானலில் நடைபெறவுள்ள மலர் கண்காட்சிக்கு இறுதிகட்ட மலர் நாற்று நடவு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பங்ளாதேஷை எதிர்கொள்கிறது.

துபாயில் இப்போட்டி பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

கராச்சியில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நியுசிலாந்து அணி 60 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் பேட் செய்த நியுசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 320 ரன் எடுத்தது.

321 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பாகிஸ்தான் 47 புள்ளி இரண்டு ஓவரில் 260 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் உத்திரபிரதேச அணியை வென்றது.